# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 114/2021 |
| Prosecution Witness | : | PW 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வசந்தா | Caste | : | |
| Father Name | : | வின்சென்ட் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.01.2024.**

***1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது வருகை***

***3 வது எதிரி வருகை இல்லை குவிமுச பிரிவு 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் பள்ளிக்கிராகாரம் காந்திநகரில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலை பார்க்கிறேன். குணா என்பவரை தெரியும்.சம்பவதன்று நான் என் வீட்டில் இல்லை, கொத்தனார் வேலைக்கு போய்விட்டேன். நாலு மணிக்கு மேல் எனக்கு தகவல் கிடைத்து நான் வந்து பார்த்தபோது என் வீட்டிற்கு பின்னால் பாத்ரூமுக்கும் லெட்டினுக்கும் இடையில் குணா வெட்டபட்டு கிடந்தார், கும்பலாக இருந்தது. போலிஸார் விசாரித்தார்கள்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிஸார் விசாரித்தபோது 17.05.2020 ஆம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள காளியம்மன்கோவிலில் குணா ஒரு தரப்பாகவும், மணிகண்டன் ஒரு தரப்பாகவும் இருந்து சண்டை போட்டு தகராறு ஏற்பட்டதும் என்றும், அந்த முன்விரோதத்தால் 28.05.2020 தேதியில் மதியம் 2 1/2 நான் சத்தம் கேட்டு பார்த்தபோது வெண்ணிலா வீட்டில் குணாவை எதிரிகள் தாக்கி குத்தி கொன்றார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு சம்பவத்தை பார்க்கவில்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.